In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 157/2021 | Prosecution witness P.W.15 |
| Name: Dr. Jeyalalitha | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 16-12-2024.

**(All Accused present.)**

முதல் விசாரணை :-

நான் தற்சமயம் திண்டுக்கல் அரசு மருத்துவக்கல்லூரி மருத்தவமனையில் முதுநிலை அரசு மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 11..1.2019 ம் தேதியன்று திண்டுக்கல் மருத்துவமனையில் பணியில் இருந்தபோது சுமார் 1 மணியளவில் சிவக்குமார், வயது 27 என்பவரி்ன் பிரேதத்தை பிணக்கூறாய்வு செய்வதற்காக வடமதுரை காவல் நிலைய ஆய்வாளர் ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் கடிதத்துடன் படிவம் 86 ஐ இணைத்துக்கொடுத்திருந்தார். அந்த வேண்டுகோள் கடிதம் அதசாஆ.6. அதன்படி நான் பிரேத பரிசோதனை செய்தேன். பிரேதம் உடல் முழுவதும் விறைப்புத் தன்மை காணப்பட்டது. மிதமான உடல்வாகு உடைய ஆண் பிணம் கண்கள் மூடிய நிலையில், நாக்கு உள்ளிருந்த நிலையில், குப்புர படுக்கவைக்கப்பட்டிருந்தது.

**பிரேதத்தில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள்**

1. 4x5 c.m. அளவில் ஒரு சிராய்புக்காயம் இடது கால் விரல்களில் இருந்தது.
2. வலது பாதம் சிதைந்து காணப்பட்டது. முதல் 1,2,3 விரல்கள் காணவில்லை.
3. 4x2x15 c.m. அளவுள்ள ஒரு குத்துக்காயம் வலதுபக்க நெஞ்சிற்கு பின்புறத்தில் காணப்பட்டது.

**உள்காயங்கள்**

விலா எலும்புகள் நன்றாக இருந்தது. சுமார் 2 லிட்டர் அளவுள்ள இரத்தம்

நெஞ்சு பகுதியில் காணப்பட்டது. இருதயத்தின் வலதுபுறம் இரத்தம் நிரம்பியும், இடது புறம் காலியாக இருந்தது. வலது நுரையீரலில் மேற்கண்ட காயம் ஆழமாக வந்து வலது நுரையீரலை குத்தியிருந்தது. குரல்வளை எலும்பு பொருந்தியிருந்தது. வயிற்றில் சுமார் 100 மில்லி அளவுள்ள செறித்த உணவு துகள்கள் இருந்தன. கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரங்கள் வெளிறி காணப்பட்டது. மண்டை ஓடு பொருந்தியிருந்தது. மூளையின் சவ்வு நன்றாக பொருந்தியிருந்தது. மூளை வெளிறி காணப்பட்டது.

**கருத்துரை**

மேற்கூறிய நபர் மிக முக்கியமான உறுப்பான நுரையீரலில் ஏற்பட்ட காயத்தினாலும் மற்றும் அதனால் ஏற்பட்ட அதிக இரத்தப்போக்கின் காரணமாக 15 முதல் 17 மணிக்கு முன்னதாக இறந்திருக்கலாம் என கருத்து தெரிவித்தேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை அதசாஆ.7. நான் வழங்கிய இறுதிக் கருத்துரை அதசாஆ.8. மேற்சொன்ன காயங்கள் என்னிடம் காண்பிக்கப்படும் சாபொ.1 கத்தியால் ஏற்பட வாய்ப்புண்டு. இவ்வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை–**

வெளிப்புற காயங்களில் 1,2 காயங்கள் காயம்பட்ட நபரை இருசக்கர வாகனத்தில் அமரவைத்து சிலுவத்தூரிலிருந்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வரும்போது அந்த கால்கள் தார்ரோட்டில் இழுத்து வருவதால் ஏற்பட வாய்ப்புண்டு என்றால் முதலாவது காயம் ஏற்பட வாய்ப்புண்டு. 2 வது காயம் விரல்களே இல்லாமல் இருந்தது. அவை ஏற்பட வாய்ப்பில்லை. 2 வது காயத்தில் குத்துக்காயமோ வெட்டுக்காயமோ இல்லை என்றால் மூன்று விரல்களும் இல்லாமல் இருந்தது. வலது மற்றும் இடது என இரண்டு நுரையீரல்கள் உள்ளது என்றால் சரிதான். வலது நுரையீரல் மேல்புறம், நடுப்புறம், கீழ்ப்புறம் என மூன்று பிரிவுகளாக இருக்கும் என்றால் சரிதான். இடது பக்க நுரையீரலில் மேல்புறம், கீழ்ப்புரம் மட்டுமே இருக்கும் என்றால் சரிதான். கத்தி குத்துக்காயம் நுரையீரலில் எந்தபுறத்தில் இருந்தது என குறிப்பிட்டுச்

சொல்லவில்லை என்றால் சரிதான். காயம்பட்ட நபரை இருசக்கர வாகனத்தில் பின்னால் உட்காரவைத்து ஓட்டிச் செல்லும்போது காயம்பட்ட நபரின் மூக்குப்பகுதி முன்னால் உட்கார்ந்திருக்கும் முதுகுப்பகுதியில் பட்டு மூச்சுத் திணறல் ஏற்பட வாயப்புண்டு என்றால் சரிதான். அவ்வாறு செல்லும்போது அந்நபர் கழுத்தை நிமிர்த்தி வைக்கமுடியாமல் குனித்த நிலையிலேயோ பக்கவாட்டில் சாய்ந்த நிலையிலேயோ செல்லும்போது சீறாக மூச்சு செல்லாமல் மூச்சுத் திணறல் ஏற்பட வாயப்புண்டு என்றால் சரிதான். 3 வது வெளிக்காயம் ஒருவர் முழு பலத்துடன் குத்தும்போதுதான் ஏற்படும் என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2024.12.16 16:42:02 +0530

Principal District Judge,
Dindigul.